# நாட்டிற்கே வழிகாட்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் திட்டங்கள்!

## முதல்வர் உரை!.. முதல் பக்கத் தொடர்ச்சி

நாட்டிற்கே வழிகாட்டுகின்ற மாதிரியான ஏராளமான திட்டங்களை, நீங்கள் உருவாக்கிய நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கியிருக்கிறது!

கிராமப்புறப் பொருளாதாரத்தையும், பெண்களின் முன்னேற்றத்தையும் சாத்தியப்படுத்திய மாபெரும் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் திட்டம்!

உங்களில் நிறையப் பேர் சுய உதவிக் குழுக்களால் பயனடைந்திருப்பார்கள். துணை முதலமைச்சராக இருந்தபோது, நானே பல மணிநேரம் மேடைகளில் நின்று சுழல்நிதி வழங்கியிருக்கிறேன்.

**பெண்களின் முன்னேற்றத்தில் “விடியல் பயணத் திட்டத்தின்” பெரும் பங்களிப்பு!**

இதன் அடுத்தக்கட்டப் பாய்ச்சலாகதான், மகளிர் உரிமைத் தொகை வழங்குகிறோம்! நீங்கள் எல்லோரும் கட்டணமில்லாமல் பேருந்தில் செல்கிறீர்களே, அந்த விடியல் பயணத் திட்டம் பெண்கள் முன்னேற்றத்தில் எவ்வளவு பெரிய பங்களிப்பைச் செலுத்துகிறது என்று எண்ணிப் பாருங்கள்...

நீங்கள் காலையில், சீக்கிரம் வேலைக்குப் போகவேண்டும் என்று அவசர அவசரமாகக் கிளம்புவீர்கள்.. அதற்கு நடுவில் சமையல் செய்யவேண்டும்.. ஆனால், அந்தச் சுமையைக் குறைக்க – அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற நம்முடைய குழந்தைகளுக்கு சத்தாகவும் – சுவையாகவும் காலை உணவு வழங்குகிறோம்!

நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் காலேஜ் முடித்துவிட்டு வேலைக்குச் செல்வதற்குத் தயாராக இருக்கின்ற அளவுக்கு – ‘நான் முதல்வன்’ திட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குகிறோம்!

நம்முடைய பிள்ளைகள் படித்து முன்னேறி வரவேண்டும் என்று ‘புதுமைப் பெண்’ – ‘தமிழ்ப்புதல்வன்’ போன்ற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இப்படி, ஒவ்வொரு துறையிலும், பல திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது!

**கிராம வளர்ச்சிக்கு நமது அரசின் பல்வேறு திட்டங்கள்!**

இவையெல்லாம் முத்திரைத் திட்டங்கள்! இதேபோல, கிராம வளர்ச்சிக்கு என்று பல திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்! கிராம மக்கள் தங்களுடைய ஊராட்சி நிர்வாகத்தில் பங்கேற்கவும், வளர்ச்சிப் பாதையில், கிராம ஊராட்சியைக் கொண்டு செல்லவும், உரிய உரிமைகளை அளிக்கவேண்டும் என்பது தான் நம்முடைய அரசின் நோக்கம்!

**ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை உணர வைக்கும் முக்கியத் தருணம்!**

அதற்காக, ஆண்டுதோறும் ஆறு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது. இந்தக் கிராமசபைக் கூட்டங்கள் தான், ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை உணர வைக்கின்ற முக்கியத் தருணம்!

நம்முடைய கிராமங்களின் தற்போதைய தேவைகள், வளர்ச்சி இலக்குகள் மற்றும் நலன்கள் குறித்து நேரடியாக விவாதித்து, தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற ஒரு விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும்.

**சாதிப் பெயர்களை நீக்கி பொதுப் பெயர்கள் சூட்டும் நடவடிக்கை!**

நம்முடைய திராவிட மாடல் அரசு சமூகநீதி, சமத்துவத்தை நிலைநாட்ட, சுயமரியாதை அடிப்படை யிலான சமூகத்தை உருவாக்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாகத்தான், குடியிருப்புகள், சாலைகள், தெருக்க ளில் இழிவான தன்மையோடு சாதிப் பெயர்கள் இருந்தால், அதை மாற்றி பொதுப் பெயர்களைச் சூட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும், ‘நம்ம ஊர், நம்ம அரசு’ என்ற பெயரில், கிராம சபையில் மக்கள் கலந்தாலோசித்து, 3 முக்கியத் தேவைகளைத் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

அப்படி கண்டறியப்படும் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.

**‘நபார்டு’ திட்டத்தின் கீழ் சாலைகள் – பாலங்கள் மேம்பாடு!**

“குடிசையில்லாத் தமிழ்நாடு” என்ற இலக்கை எட்டிவிடும் வகையில், ‘கலைஞரின் கனவு இல்லம்’ என்ற புரட்சிகரத் திட்டம் துவங்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில், ஏழாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு முடிவெடுத்து, 2024-25ல் இதுவரை, 99 ஆயிரத்து 453 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

2025-26ல், இன்றைய நிலையில், 78 ஆயிரத்து 312 வீடுகள் கூரை மட்டம் நிலைக்கு மேல் முன்னேற்றத்தில் இருக்கிறது.

அதேபோல, சாலை வசதிகளைப் பொறுத்த வரைக்கும், 2022-23ஆம் ஆண்டில் அறிமுகமான முதல்வரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் – நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி – உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் – 21 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான சாலைகள் மற்றும் பாலங்களை மேம்படுத்தியிருக்கிறோம்!

**பெண்கள் – குழந்தைகளின் நலனை மேம்படுத்தும் ‘தாயுமானவர்’ திட்டம்!**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முக்கிய முயற்சியாக, சாலை, குடிநீர், பள்ளிக்கூடங்கள், நூலக வசதிகள் போன்ற சேவைகள் விரிவாக்கப்படுகிறது.

‘தாயுமானவர்’ திட்டத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது!

இவ்வளவு திட்டங்களையும், முன்னெடுப்பு களையும் நம்முடைய அரசு செய்து கொண்டு வந்தாலும், குடிமக்களாக ஒவ்வொரு தனிநபருக்கும் பல பொறுப்புகள் இருக்கிறது! அதையெல்லாம் நாம் சரியாகச் செய்து, நாம்தான் நம்முடைய கிராமத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போகவேண்டும்! உங்கள் முதலமைச்சராக, உங்களில் ஒருவனாக அதற்காக சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்...

**குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தினால் தகவல் தருக!**

ஒவ்வொரு வீட்டிலும், குழந்தைகள் படிப்பதை நாம் எல்லோரும் உறுதி செய்ய வேண்டும்! எங்கேயாவது – யாராவது – குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தினால், உடனே மாவட்ட நிர்வாகத்துக்கு தகவல் கொடுத்து, அவர்களை மீட்கவேண்டும்!

> **“உங்களில் நிறையப் பேர் சுய உதவிக்குழுக்களால் பயனடைந்திருப்பார்கள். துணை முதலமைச்சராக இருந்தபோது, நானே பல மணிநேரம் மேடைகளில் நின்று சுழல்நிதி வழங்கியிருக்கிறேன்.**
>
> **இதன் அடுத்தகட்டப் பாய்ச்சலாகத்தான், மகளிர் உரிமைத் தொகை வழங்குகிறோம்! நீங்கள் எல்லோரும் கட்டணமில்லாமல் பேருந்தில் செல்கிறீர்களே... அந்த விடியல் பயணத் திட்டம் பெண்கள் முன்னேற்றத்தில் எவ்வளவு பெரிய பங்களிப்பைச் செலுத்துகிறது என்று எண்ணிப் பாருங்கள்...”**

இதை, கிராம ஊராட்சிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் என்று எல்லோரும் பொறுப்புடன் கண்காணிக்க வேண்டும்.

**100 நாள் வேலைத் திட்டம் – வெளிப்படையான தகவல் வேண்டும்!**

அடுத்து, கிராம மேம்பாட்டுக்கு முக்கியமான திட்டமான, நூறு நாள் வேலைத் திட்டம்! இந்தத் திட்டம் முறையாகச் செயல்பட்டு வருவதைக் கண்டிப்பாக உறுதி செய்யவேண்டும்! இந்தத் திட்டத்தில், வரவு செலவு எவ்வளவு? எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது? என்று அனைத்துத் தகவல்களும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

**கண்ட இடங்களில் குப்பை போடுவதைத் தவிர்ப்போம்!**

அடுத்து, ஒவ்வொரு தனிமனிதருக்கும், சமூகப் பொறுப்பு இருக்கவேண்டும்! நம்முடைய வீடு குப்பைக் கூளமாக இருந்தால், சும்மாவா இருப்போம்? நம் எல்லோருடைய வீடும் சேர்ந்ததுதான் நம்முடைய கிராமம்... அதைச் சுத்தமாக வைத்துக் கொள்கின்ற பொறுப்பு நமக்கு தான் இருக்கிறது! முடிந்த அளவுக்கு பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும்... குப்பைகள் – ஊராட்சிகளில் வருகின்ற பேட்டரி வண்டிகளில், மக்கும் குப்பை – மக்காத குப்பை என்று தனித்தனியாக பிரித்துப் போட வேண்டும். கண்ட இடங்களில் எல்லாம் குப்பை போடுவதைத் தவிர்க்க வேண்டும்!

**நோயற்ற வாழ்வுக்கு சுகாதாரமே அடிப்படை!**

ஊராட்சி நிர்வாகங்களைச் சேர்ந்தவர்கள் குப்பை களைப் பிரிப்பது, கழிவுநீர் மேலாண்மை பற்றியெல்லாம், மக்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்லி, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்! “என்னடா, இதையெல்லாம் சிறிய சிறிய விஷயம் தானே, இவையெல்லாம் முதலமைச்சர் சொல்ல வேண்டுமா?” என்று நினைக்கிறீர்களா? சிறிய சிறிய விஷயங்களை நாம் கரெக்டாகச் செய்தாலே, பெரிய பெரிய நன்மைகள் நிச்சயம் உண்டாகும்! “நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வம்” என்று எல்லோருக்குமே தெரியும்! இந்த நோயற்ற வாழ்வுக்கு சுகாதாரம்தான் அடிப்படை!

**காலநிலை மாற்றம் குறித்து – மக்களுக்கு விழிப்புணர்வு தேவை!**

மருத்துவ அலுவலர்களும், ஊராட்சி நிர்வாகமும் ஒருங்கிணைந்து செயல்பட்டால், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு, கிராம மக்களுடைய ஆரோக்கியம் மேம்படும்! அதனால், நம்முடைய கிராமங்களை சுத்தமாக வைத்துக் கொள்வதில் யாருக்கும் அலட்சியம் இருக்கக் கூடாது!

அடுத்து, புவி வெப்பமடைதல்! உங்களுக்கு நன்றாக தெரியும்... இப்போதெல்லாம் முன்பு போல சரியான நேரத்துக்கு – சரியான அளவுக்கு மழை பெய்வதில்லை! இதற்குக் காரணம், காலநிலை மாற்றம்! இதுபற்றிய விழிப்புணர்வும், கிராம மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும்!

அடுத்து, மக்களுடைய முக்கிய பிரச்சினையாக இருப்பது, தண்ணீர் பற்றாக் குறை! “பணத்தைத் தண்ணியாக செலவழிக்கிறார்கள்” என்று சில பேர் சொல்லுவார்கள்... உண்மையில், “தண்ணியைத்தான் பணம் போல பார்த்து, பார்த்து செலவழிக்க வேண்டும்”. தண்ணீர்ப் பற்றாக்குறை வராமல் இருப்பதற்கு மழைநீர் சேகரிப்பு மிகவும் அவசியமானது! இதனால்தான், நிலத்தடி நீர்வளம் மேம்பட்டு, கிராமங்களுக்கு நீண்டகால நீர்ப் பாதுகாப்பு ஏற்படும்! இதற்கான பொறுப்பு, நம்முடைய எல்லோரிடமும் தான் இருக்கிறது!

எனவே, இதற்காக அரசும், ஊராட்சிகளும் எடுக்கின்ற முயற்சிகளுக்கு நீங்கள் எல்லோரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**அடிப்படைச் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் அவசரத் திட்டங்கள்!**

அடுத்து, மழைக்காலம் தொடங்கப் போகிறது! டெங்கு, சிக்குன் குனியா போன்ற நோய்களைத் தடுக்கின்ற சுகாதார நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். வடகிழக்குப் பருவமழைக்கு முன்பே, அனைத்து ஊராட்சி களிலும், அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். வீதிகள், குடிநீர், மின்சாரம், வடிகால் போன்ற அடிப்படைச் சேவைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, அவசரத் திட்டங்களை உடனே செயல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் சிறப்புக் குழுக்களை அமைத்து, அவசர கால நடவடிக்கைகளைத் திட்டமிடவேண்டும். இதனால், பேரிடர் நேரங்களில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைக் குறைக்கலாம்,

அடுத்து, நான் முக்கியமாகச் சொல்ல விரும்புவது கிராம ஊராட்சிகளின் நிர்வாகம், நிதி மேலாண்மை வெளிப்படையாக இருக்க வேண்டும். கிராம சபை மூலம் வரவு – செலவு கணக்குகள் மக்களிடம் விளக்கப்பட்டு, அவர்களின் ஒப்புதலோடு செயல்படவேண்டும்.

**கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்!**

ஒவ்வொரு ஊராட்சியும் எப்போது, எவ்வளவு செலவிட்டது என்று மக்கள் தெரிந்து கொள்கின்ற வகையில் தகவல்கள் பகிரப்படவேண்டும். இந்தக் கூட்டத்தில், நீங்கள் முன்வைக்கின்ற ஒவ்வொரு பரிந்துரையும் பல்வேறு திட்டங்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

நம்முடைய கிராமங்கள்தான் எதிர்கால வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற முக்கிய அங்கமாக இருந்து வருகின்றன. நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்த வரைக்கும், மக்கள் பங்கேற்போடு வளர்ச்சியை உறுதிசெய்கின்ற அரசு இது!

“கிராமத்தின் வலிமைதான் மாநிலத்தின் வலிமை” என்று நம்முடைய செயல்பாடுகளால் நிரூபித்துக் காட்டுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## பொதுமக்கள் மற்றும் கழகத் தோழர்கள் பார்வைக்கு...

‘தி.மு.க. அறக்கட்டளை சார்பாக, கழகத்தினருக்கும் – பொதுமக்களுக்கும் இலவச கண் சிகிச்சை வழங்கும் நோக்கத்துடன் அண்ணா அறிவாலய வளாகத்தில் **“வெற்றிச்செல்வி அன்பழகன் கண் மருத்துவமனை”** இயங்கி வருகிறது.

இங்கு அனைத்து மக்களுக்கும் கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதோடு, லென்ஸ் பொருத்தும் வசதியும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

இந்த கண் மருத்துவமனை வழங்கும் சேவைகளை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- தி.மு.க. அறக்கட்டளை**

**மருத்துவமனை இயங்கும் நேரம்**

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை
காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
(பொது விடுமுறை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு விடுமுறை)
தொடர்பு எண்.: 044-24320266




கோவாவில், கோமன்தக் செய்தி நிறுவன ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய தென்னை மாநாட்டில், நேற்று முன்தினம் (10.10.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தென்னை விவசாயத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட தமிழ்நாடு மற்றும் கோவா மாநிலம் இடையே வேளாண் விளை பொருட்கள் சந்தைப்படுத்துதல் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. இம்மாநாட்டில், கோவா மாநில முதலமைச்சர் பிரமோத் சாவந்த் மற்றும் அம்மாநில அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.